[1989 ஏப்ரல் 5

திருவையாறு நகரில் ஆதி திராவிடர் நலத்துறை மாணவர்கள் விடுதிக்குப் புதிய கட்டிடம்

36—(*வினா எண். 216)— திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாறு நகரில் அமைந்துள்ள ஆதி திராவிடர் நலத் துறை மாணவர்கள் விடுதிக்கு புதிதாக கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: தலைவர் அவர் களே, திருவையாறு ஆதி திராவிடர் மாணவர்கள் விடுதிக்குக் கட்டிடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் விடுதி கட்ட திருவையாறில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா? எவ்வளவு தொகை? எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்யப் படுகின்ற நேரத்திலே, கோர்ட்டில் ஸ்டே வாங்கப்பட்ட காரணத்தினால் அது தடைப்படுத்தப்பட்டுள்ளது. அந்தத் தடை நீக்கப்பட்டு, விடுதி கட்டுவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற் கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. ஆசையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் நலத்துறையின் சார்பாக மாணவர்களுக்கு விடுதி அமைக்க நில ஆர்ஜிதம் செய்ய முற்படுகின்ற நேரத்தில் நீண்ட சட்ட விதிகளைக் கடைப் பிடிக்கவேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தினால், நிலத்துக் குச் சொந்தக்காரர்கள் அந்த நிலத்தைக் கொடுக்க மறுத்து, தடையைப் பெறுகின்ற அளவுக்கு வந்துவிடுகிறார்கள். எனவே அது காலதாமதப்படுகிறது. சில இடங்களில் தடுத்து நிறுத்தப் படுகின்றது. இதனாலேகூட பல மாணவர்கள் விடுதிகள், அதைப் போல காலனி வீடுகள், ஊருக்கு ஒதுக்குப்புறத்திலே நீண்ட தூரம் தள்ளி அமைக்கிறார்கள். இது கடந்த காலத்திலே இருந்த நிலைமையை தீண்டத்தகாதவர்களைப்போல, நடத்துவதைப் போல சுட்டிக்காட்டுகிற அளவுக்கு இருக்கிறதை தெரிந்துகொண் டிருக்கிற காரணத்தினாலே, அதை மாற்ற சட்டவிதிகள் மாற்றப் படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

1989 ஏப்ரல் 5]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்கின்ற நேரத்திலே, நிலம் ஆர்ஜிதம் செய்கின்ற அதிகாரிகளால் அது ஆர்ஜிதம் செய்யப்படுகின்ற அளவுக்கு அதைப் பரிசீலனை செய்து செய்யவேண்டும். வேண்டுமென்றே ஒரு சில காரணங்களை மனதில் கொண்டு, ஆர்ஜிதம் செய்கின்ற காரணத்தினால், கோர்ட்டிலே ஸ்டே வாங்குகின்ற அளவுக்கு அது வந்துவிடுகிறது. அதைப் பற்றி அரசு தனியாக பரிசீலனை செய்து அது நேராவண்ணம் காக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருப்பதால் இந்தக் கேள்வியை நான் கேட்கின்றேன். கள்ளர் சீரமைப்புத் துறையில், 38 பள்ளி மாணவர் விடுதிகள் இருக்கின்றன. அதில் 8 பள்ளி மாணவர் விடுதிகள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்கள். பாக்கியிருக்கின்ற 30 பள்ளி மாணவர் விடுதிகள் கட்டடங்களும் சுகாதார வசதியுமின்றி, விளையாட்டு மைதானம் இன்றி, மாணவர்கள் சிரமத்தோடு வாடகைக் கட்டடத்தில் இருக்கின்றனர். அரசாங்கம் ஆண்டுதோறும் வாடகை கட்டிவிடுகிறது. எனவே பள்ளி மாணவர்களுக்கு அரசு சொந்தமாக சுகாதார வசதியோடு கூடிய, மாணவர் விடுதிகள் கட்டிக் கொடுக்குமா என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றிய வினாக்களை தனியே கொடுத்துக் கேட்பார்களேயானால், அது பற்றிய முழு விவரத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்கு 20—11—1985 ஆம் ஆண்டு ரூ. 28 லட்சம் ஒதுக்கீடு செய்த அந்த ஆதிதிராவிட மாணவர் விடுதிகள் இன்னும் கட்டிமுடிக்கப் படாமல் இருக்கின்றனவே. நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டுள்ளது. அதைக் கட்டி முடிக்க சீக்கிரம் ஏற்பாடு செய்யப் படுமா? எப்போது அது நடக்கும்?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி அரசு தீவிரமாக முடிவெடுத்து செயல்படச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆதி திராவிடர் நலத் துறை மாணவர் விடுதிகளில் சென்ற காலங்களில் சரியான சுகாதார வசதி, குடிதண்ணீர் வசதி போன்ற வசதிகள் இல்லாத இடங்களில் அவைகளை உள்ளாட்சி அமைப்புகள் செய்து தர முன்வந்தால் அதற்கு விதிகளில் இடம் இல்லையென்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட விடுதிகளில் மேற்கண்ட வசதிகளை சம்பந்தப்பட்ட ஒன்றியங்களோ, பேரூராட்சிகளோ, ஊராட்சிகளோ செய்ய முன் வந்தால் தாராளமாகச் செய்யலாம் என்கிற வகையில் அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு ஆவன செய்து, முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறை மாணவர் விடுதிக்கு கட்டிடங்கள் கட்ட நில ஆர்ஜிதம் செய்வதில் உள்ள கஷ்டங்களை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நாகப்பட்டினம், குறிச்சியில் ஆதி திராவிடர் நலத்துறை மாணவர் விடுதிக்கு நில ஆர்ஜிதம் செய்தும், கட்டிடம் கட்டுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதே, அது விரைவில் கட்டி முடிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரங்களை உடனடியாக பரிசீலனை செய்து அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் நடைபெறுகின்ற மாணவர் விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்கள். அதுபோல மாணவர்களின் எண்ணிக்கையை கூடுதலாக்கி சேர்க்கின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரம் வேண்டுமானால்., தனிக் கேள்வி கேட்டால் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS